# கும்மிடிப்பூண்டியில்...



கும்மிடிப்பூண்டி, அக். 2: கும்மிடிப்பூண்டியை அடுத்த ஆரம்பாக்கத்தில் உள்ள சமூக மனிதநேய சேவை மன்றத்தின் சார்பில், மகாத்மா காந்தியின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ரத்ததான முகாம் (படம்) நடத்தப்பட்டது.

ஆரம்பாக்கத்தில் உள்ள மகாராஜா அக்ரசன் வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற இந்த ரத்ததான முகாமை காந்தி வோல்ட் பவுண்டேஷன் அமைப்பின் நிறுவனர் எம்.எல்.ராஜேஷ் தலைமை தாங்கி ரத்ததானத்தின் மகத்துவத்தை எடுத்துரைத்து முகாமை தொடங்கி வைத்தார்.

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை ரத்த வங்கியின் சார்பில் செவிலியர் கல்பனா தலைமையிலான குழுவினர் ரத்த தான முகாமை இணைந்து நடத்தினர். இந்த ரத்ததான முகாமில் 75 பேர் ரத்ததானம் செய்தனர்.